சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 26/2022

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 24ம் நாள் PW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு. சரவணன்<br>த /பெ. தயாளன் | நாள் 24.06.2026 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

**மனுதாரர்கள் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் மனுவில் 3ம் தரப்பினர் மற்றும் மனுதாரர் தரப்பு சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்து சம்பந்தமாக நான் புகார் ஏதும் அளிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து சம்பந்தமாக முதன்தமுதலில் இந்நீதிமன்றத்தில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இறந்து போனவர் அவர் எங்கள் வீட்டிலிருந்து 4 வீடு தள்ளியுள்ளார். விபத்தின் போது சவ ஊர்வலத்தை பார்த்தேன். அங்கு பட்டாசு வெடித்தார்கள் என்றால் சரிதான். சவஊர்வலத்தை எடுத்துச் சென்ற வாகனம் தீப்பிடித்து எரிந்ததா என்றால் இல்லை. சவ ஊர்வல வாகனம் சேவை சாலையில் இருந்தது. இருசக்கர வாகனம் தேசிய நெடுஞ்சாலையில் பற்றி எரிந்து கொண்டிருந்தது. அங்கு புகை

மூட்டமாக இருந்தது.  அதனால் பொதுமக்கள் சிதறி ஓடினார்கள் என்றால் சரிதான். அதனால் பரசுராமன் எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் வேன் தான் என்னை இடித்தது. 500 மீட்டர் தள்ளி நான் நின்று கொண்டிருந்தேன். புகைமூட்டமாக இருந்ததால் என்னால் விபத்தை நேரடியாக பார்த்திருக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல.  மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை